



# சோசலிஸப்புரட்சியும் சுயநிர்ணய உரிமையும்



SEELAN BOOKS
SIGNATURE
N

## வி.இ.லெனின்

சோஷலிஸப் புரட்சியும் தேசங்களின் சுயநிர்ணய உரிமையும் (ஆய்வுரைக்ள்) . . . . . 1

1. ஏகாதிபத்தியமும் சோஷலிஸமும் ஒடுக்கப்பட்ட தேசங்களின் விடுதலையும் . . . . 1

2. சோஷலிஸப் புரட்சியும் ஜனநாயகத்துக்கான போராட்டமும் . . . . . . . . . 3

3. சுயநிர்ணய உரிமையின் முக்கியத்துவமும் கூட்டாட்சியுடன் அதன் உறவும் . . . . . 6

4. புரட்சிகர-பாட்டாளி வர்க்க முறையில் தேசங்களின் சுயநிர்ணயப் பிரச்சினையை முன்வைத்தல் . . . . . . . . . . . . . . . . . 8

5. தேசியப் பிரச்சினை பற்றி மார்க்ஸியமும் புருதோனியமும் . . . . . . . . . . . 2

6. தேசங்களின் சுயநிர்ணயம் பற்றிய பிரச்சினையில் மூன்றுவித நாடுகள் . . . . . 4

7. சமூக-தேசியவெறியும் தேசங்களின் சுயநிர்ணயமும் . . . . . . . . . . . . . . . 6

8. அடுத்துவரும் காலத்தில் பாட்டாளி வர்க்கத்தின் திட்டவட்டமான பணிகள் . . . . 8

9. சுயநிர்ணயத்தின்பால் ருஷ்ய, போலந்து சமூக-ஜனநாயகவாதமும் இரண்டாவது அகிலமும் கடைப்பிடிக்கும் போக்கு . . . . . . . 20

ELAN BOOKS

## சோஷலிஸப் புரட்சியும் தேசங்களின்* சுயநிர்ணய உரிமையும் (ஆய்வுரைகள்)

### 1. ஏகாதிபத்தியமும் சோஷலிஸமும் ஒடுக்கப்பட்ட தேசங்களின் விடுதலையும்

ஏகாதிபத்தியம் என்பது முதலாளித்துவ வளர்ச்சியின் உச்சக் கட்டம். மிக முன்னேறிய நாடுகளில் மூலதனமானது தேசிய அரசுகளின் எல்லைகளுக்கு அப்பாலும் விரிந்து, போட்டிக்குப் பதிலாக ஏகபோகத்தை நாட்டி, சோஷலிஸத்தை அடைவதற்கான புறநிலை முதனிலைகள் அனைத்தையும்

* மார்க்ஸியத் தத்துவத்தில் தேசம் (nation) என்பது நிலப் பரப்பு, பொருளாதார உறவுகள், மொழி, கலாசாரம், மனப்பாங்கு இவற்றில் காணும் சில தனித்தன்மைகள் ஆகியவற்றின் அடிப்படையில் மக்களிடையே வரலாற்று வழியில் உருவாகிய ஒற்றுமையைக் குறிக்கிறது. முதலாளித்துவப் பொருளாதாரத்துக்குரிய உறவுகள் உருவாகிய போது தேசிய இனத்தை (nationality) காட்டிலும் மேலான சமூக-வரலாற்று வழிப்பட்டதாகிய தேசம் உருவாகி வளர்கிறது. மனித இனம் (race), குலம் (tribe), மதம்,—அரசு ஆகியவற்றிலிருந்து தேசத்தை வேறுபடுத்திப் புரிந்து கொள்ள வேண்டும்.

தேசங்கள் பலவழிகளில் உருப்பெறுகின்றன. ஐரொப்பாவில் ஏற்கெனவே நிலவிய பெருந் தேசிய இனங்களின் அடிப்படையில், தேசங்கள் தோன்றின. ஒருசில சூழ்நிலைகள் முழுவளர்ச்சி பெறாத போது தேசங்கள் உண்டாகின்றன. எடுத்துக்காட்டாக, ஆசியாவிலும் ஆப்பிரிக்காவிலும், விடுதலைப் போராட்டக் காலத்திலும், குறிப்பாக விடுதலை அடைந்த பின்னரும் தேசங்கள் உருவாகும் நிகழ்ச்சிப்போக்கு நடைபெறுகிறது. தேசங்கள் உண்டாதல் எல்லாத் தேசிய இனங்களுக்குரிய தவிர்க்கவொண்ணா ஒரு விதியன்று, எண்ணிக்கையில் குறைவான தேசிய இனங்கள், ஏற்கெனவே நிலவி வரும் பெருந் தேசங்களுடன் ஒன்றிணைதல் அடிக்கடி



தோற்றுவித்திருக்கிறது. ஆகவே மேற்கு ஐரோப்பாவிலும் அமெரிக்க ஐக்கிய நாடுகளிலும் முதலாளித்துவ அரசாங்கங்களைக் கவிழ்த்து, முதலாளி வர்க்கத்தின் உடைமைகளைப் பறிமுதல் செய்வதற்கான பாட்டாளி வர்க்கப் புரட்சிப் போராட்டம் இன்றைய நிகழ்ச்சி நிரலில் இடம்பெற்றுள்ளது. வர்க்க முரண்பாடுகளை மிகப் பெரிய அளவில் தீவிரப்படுத்துவது மூலமாகவும், டிரஸ்டுகள், உயர்வான வாழ்க்கைச் செலவு ஆகியவற்றால் பொருளாதார துறையிலும், இராணுவ ஆதிக்கம் வளர்வது, முன்னைவிட அடிக்கடி நிகழும் போர்கள், முன்னிலும் அதிக பலம் வாய்ந்த பிற்போக்குச் சக்திகள், தேசிய ஒடுக்கல் முறையையும் காலனிக் கொள்ளையையும் மேலும் வலுப்படுத்தி விரிவுபடுத்துவது ஆகியவற்றால் அரசியல் துறையிலும் ஒருங்கே பொதுமக்களுடைய வாழ்க்கை நிலைமைகளை மோசமாக்குவதின் மூலமாகவும் ஏகாதிபத்தியம் இப்போராட்டத்தை நடத்தும்படி பொதுமக்களைக் கட்டாயப்படுத்துகிறது. வெற்றி பெற்ற சோஷலிஸம் முழுமையான ஜனநாயகத்தைக் கட்டாயம் ஏற்படுத்த வேண்டும்; ஆகவே தேசங்களிடையில் முழுச் சமத்துவத்தை ஏற்படுத்துவதோடு நில்லாமல் ஒடுக்கப்பட்ட தேசங்களின் சுயநிர்ணய உரிமை, அதாவது தடையேதுமில்லாமல் சுதந்திரமாக அரசியல் வழியில் பிரியும் உரிமை நிலவும்படியும் செய்ய வேண்டும். அடிமைப்பட்ட தேசங்களை விடுதலை

நடைபெறும் ஒரு நிகழ்ச்சியாகும். சோஷலிஸப் புரட்சி, முதலாளித்துவத் தேசங்களை சோஷலிஸத் தேசங்களாகப் புனரமைப்பு செய்வதற்கான நிலைமைகளையும் அடித்தளத்தையும் தோற்றுவிக்கிறது. ஒன்றைவிட்டு ஒன்று பிரிவது அல்ல, ஒன்றுடன் ஒன்று இணைதலே சோஷலிஸத் தேசங்களின் அடிப்படைக் கூறு. தேசியத் தனித்தன்மைகளையும் வேறுபாடுகளையும் குறைத்து மதிப்பிடுவதோ, மிகைப்படுத்தி மதிப்பிடுவதோ எவ்வகையிலும் கூடாது, இவை மறையும் முற்போக்கான நிகழ்ச்சிப்போக்கிற்கு எவ்விதத்திலும் முட்டுக்கட்டை போடக் கூடாது என்றும், அதேபொழுதில் இந்நிகழ்ச்சிப் போக்கைச் செயற்கையாகவே முடுக்கிவிடவும் கூடாது என்றும் சோவியத் யூனியன் கம்யூனிஸ்டுக் கட்சியின் வேலைத் திட்டம் வலியுறுத்துகிறது.—ப-ர்.

செய்வோம் என்றும், அவைகளுடன் சுதந்திரமான, ஐக்கியத்தின் அடிப்படையில்—சுதந்திரமான ஐக்கியம் என்ற சொல் பிரியும் உரிமையில்லாவிடில் பொய்யானது—உறவுகளை அமைத்துக் கொள்வோம் என்றும் தற்போது மட்டுமின்றி, புரட்சியின் போதும் புரட்சி வெற்றிபெற்ற பின்னரும் தம் செயல்களனைத்திலும் நிரூபிக்காத சோஷலிஸ்டுக் கட்சிகள் சோஷலிஸத்துக்குத் துரோகம் செய்பவை ஆகும்.

ஜனநாயகம் என்பதும் அரசின் ஒருவித வடிவம்தான். அரசு மறையும் பொழுது இதுவும் மறைந்து போகத்தான் வேண்டும். ஆனால் இறுதி வெற்றி பெற்ற, திடமாக அமைக்கப்பட்ட சோஷலிஸத்திலிருந்து முழுநிறைவான கம்யூனிஸத்துக்கு மாற்றம் நிகழும் பொழுதுதான் இது நடைபெறும்.

## 2. சோஷலிஸப் புரட்சியும் ஜனநாயகத்துக்கான போராட்டமும்

சோஷலிஸப் புரட்சி என்பது ஒரே ஒரு தனிச்செயல் அல்ல; ஒரு முனையிலான ஒரே ஒரு தனி போரும் அல்ல; கூர்மையான வர்க்கச் சச்சரவுகள் கொண்ட ஒரு சகாப்தம் அது; எல்லா முனைகளிலும், அதாவது பொருளாதார, அரசியல் பிரச்சினைகள் அனைத்திலும் நடக்கும் தொடர்ச்சியான நீண்ட போர்கள் கொண்டது அது; முதலாளி வர்க்கத்தின் உடைமைகள் பறிமுதல் செய்யப்படுவதில்தான் அப்போர்கள் முடிவுபெற முடியும். ஜனநாயகத்துக்கான போராட்டம் சோஷலிஸப் புரட்சியிலிருந்து பாட்டாளி வர்க்கத்தைத் திசை திருப்பவும் அல்லது அப்புரட்சியை மறைத்து மங்கச் செய்யவும் திறமை வாய்ந்தது என்று கருதுவது அடிப்படைத் தவறாகும். அதற்கு மாறாக, வெற்றியுற்ற சோஷலிஸம் முழுமையான ஜனநாயகத்தைச் செய்து முடிக்காமல் எவ்வாறு இருக்க முடியாதோ அதேபோல ஜனநாயகத்துக்காக எல்லா முனைகளிலும், முரண்பாடுகளின்றி, புரட்சிகரப் போராட்டம் நடத்தாமல் பாட்டாளி வர்க்கம் முதலாளி வர்க்கத்தின் மீது வெற்றி கொள்ளத் தன்னைத் தயார் செய்து கொள்ள முடியாது.



ஜனநாயக வேலைத்திட்டத்தின் பிரிவுகளில் ஒன்றை, எடுத்துக்காட்டாகத் தேசங்களின் சுயநிர்ணயம் என்பதை, ஏகாதிபத்தியத்தின்கீழ் இது ''நிறைவேற முடியாதது'' என்றோ, ''பொய்த் தோற்றம்'' என்றோ கூறி நீக்கிவிடுவது கூடப் பெரிய தவறாகிவிடும். முதலாளித்துவத்தின் கட்டமைப்புக்குள் தேசங்களின் சுயநிர்ணய உரிமை நிறைவேற்ற முடியாதது என்ற வாதத்தை எவ்வித நிபந்தனைக்கும் உட்பட்டதல்ல என்ற பொருளாதார அர்த்தத்திலோ அல்லது நிபந்தனைக்குட்பட்டது என்ற அரசியல் அர்த்தத்திலோ புரிந்து கொள்ள முடியும்.

முதலாவது அர்த்தத்தில் எடுத்துக் கொண்டால் அது அடிப்படையான தத்துவார்த்தத் தவறாகும். முதன் முதலாக, அந்த அர்த்தத்தில் உழைப்புப் பணம் அல்லது நெருக்கடிகளை ஒழித்தல் முதலியன முதலாளித்துவத்தின்கீழ் நிறைவேற்ற முடியாதவை. தேசங்களின் சுயநிர்ணயமும் அதே மாதிரி நிறைவேற்ற முடியாதது என்பது முழுக்க முழுக்கத் தவறு. இரண்டாவதாக, இந்தப் பொருளில் ''நிறைவேற்ற முடியாதது'' என்கிற வாதத்தை மறுப்பதற்கு 1905ல் ஸ்வீடனிலிருந்து நார்வே பிரிந்ததே, அந்த ஓர் எடுத்துக்காட்டே போதும். மூன்றாவதாக, ஜெர்மனி, பிரிட்டன் போன்ற அரசுகளுக்கு இடையிலான அரசியல் உறவுகளிலும் பொதுப் போர்த்தந்திர முறை உறவுகளிலும் ஏதாவது சிறிய மாறுதல் ஏற்பட்டால்கூட போலந்து, இந்தியா முதலிய நாடுகள் இன்றோ நாளையோ புதிய அரசுகளாக உருவாவது ''நிறைவேற்றக் கூடியது'' ஆகும் என்பதை மறுப்பது மடமை ஆகும். நான்காவதாக, விரிந்து பரவத் துடித்துக் கொண்டிருக்கும் நிதி மூலதனமானது எந்த ஒரு நாட்டினுடையவும், ''சுயேச்சையான'' நாட்டினதுங்கூட, சுதந்திரமிக்க ஜனநாயக அல்லது குடியரசு அரசாங்கத்தையும், அதன் தேர்ந்தெடுக்கப்பட்ட அதிகாரிகளையும் ''சுதந்திரமாக'' விலைகொடுத்து வாங்கவோ அல்லது கைக் கூலி கொடுத்து வசப்படுத்தவோ முடியும். அரசியல் ஜனநாயகத் துறையில் எந்தவிதமான சீர்திருத்தங்களையும் செய்வதன் மூலம் நிதி மூலதனத்தின் ஆதிக்கத்தை, பொதுவாக மூலதனத்தின் ஆதிக்கத்தை,

அகற்றிவிட முடியாது; சுயநிர்ணயம் என்பது முற்றிலும் இத்துறையைத்தான் சேர்ந்தது. அரசியல் ஜனநாயகம் என்பது வர்க்க ஒடுக்குமுறைக்கும் வர்க்கப் போராட்டத்துக்கும் உரிய முன்னைவிடச் சுதந்திரமானதும், பரவலானதும், தெளிவானதுமான வடிவமாக இருக்கிறதின் முக்கியத்துவத்தை நிதி மூலதனத்தின் ஆதிக்கம் சிறிதும் சிதைப்பதில்லை. எனவே முதலாளித்துவத்தின்கீழ் அரசியல் ஜனநாயகத்துக்கான கோரிக்கைகளில் ஒன்று பொருளாதார வழியில் ''நிறைவேற்றப்பட முடியாதது'' என்று கூறும் வாதங்கள் அனைத்தும் முதலாளித்துவம், அரசியல் ஜனநாயகம் ஆகியவற்றின் பொதுவான, அடிப்படை உறவுமுறைகளை மொத்தத்தில் தத்துவார்த்த வழியில் தவருக வரையறை செய்வதாகின்றன.

இரண்டாவது அர்த்தத்தில் கூறப்படும் வன்கூற்று முற்றுப்பெருமலும் சரிநுட்பமற்றதாகவும் இருக்கிறது. இதற்குக் காரணம், தேசங்களின் சுயநிர்ணய உரிமை மட்டுமின்றி, அரசியல் ஜனநாயகத்துக்கான எல்லா அடிப்படைக் கோரிக்கைகளுமே ஏகாதிபத்தியத்தின் கீழ் ஓரளவுக்குத்தான் ''நிறைவேற்றப்படக் கூடியது'', அதுவும் ஒரு முழுமையற்ற திரிந்த முறையில், விதிவிலக்கு என்ற வகையில் (உதாரணம்: 1905ல் ஸ்வீடனிலிருந்து நார்வே பிரிந்தது) மட்டுமே அவை ''நிறைவேற்றப்படக் கூடியது''. காலனிகள் உடனடியாக விடுதலை பெற வேண்டும் என்று எல்லாப் புரட்சிகரச் சமூக-ஜனநாயகவாதிகளும் கோருகிறுர்களே அது கூட, வரிசைத் தொடரான புரட்சிகள் இல்லாமல் முதலாளித்துவத்தின்கீழ் ''நிறைவேற்றப்பட முடியாததே''. ஆனல் இதைக் காரணமாகக் கொண்டு சமூக-ஜனநாயகவாதிகள் இக்கோரிக்கைகள் அனைத்துக்காகவும் உடனடியாக, மிகவும் உறுதியாகப் போராடுவதை விட்டுவிட வேண்டும் என்றுகிவிடாது—அப்படி விட்டுவிடுவதானது முதலாளி வர்க்கத்தின், பிற்போக்கின் நோக்கத்தை ஈடேற்றுவதாகும்; ஆனல் அதற்கு மாறாக, இக்கோரிக்கைகளை முறையாக வகுத்து, புரட்சிகரமான முறையில்—சீர்திருத்தவாதமுறையில்அல்லாமல்—அவற்றை நிறைவேற்றுவது அவசியம் என்றுகிறது; முதலாளித்துவச்





சட்டமுறை வரம்புக்குள் நாம் கட்டுண்டு விடக் கூடாது, அவற்றை உடைத்தெறிய வேண்டும்; நாடாளுமன்றத்தில் வாய்ச்சொல் கண்டனத்தோடு, உரைகள் நிகழ்த்துவதோடு திருப்தி அடைந்துவிடக் கூடாது, பொது மக்களை முடிவு காணத்தக்க போராட்டங்களில் ஈடுபடும்படி ஈர்க்க வேண்டும்; ஒவ்வொரு அடிப்படை ஜனநாயகக் கோரிக்கையையும், முதலாளி வர்க்கத்தின் மீது நேரடியான பாட்டாளி வர்க்கத் தாக்குதல் வரை, அதாவது முதலாளி வர்க்கத்தின் உடைமைகளைப் பறிமுதல் செய்யும் சோஷலிஸப் புரட்சி வரை விரிவாக்கித் தீவிரப்படுத்தி வர வேண்டும். ஒரு பெரிய வேலை நிறுத்தம், அல்லது தெரு ஆர்ப்பாட்டம், அல்லது பட்டினிக் கலகம், அல்லது இராணுவ எழுச்சி, அல்லது காலனிப் புரட்சி ஆகிய எந்த ஒரு காரணத்தால் மட்டுமே சோஷலிஸப் புரட்சி வெடித்தெழலாம் என்பது அல்ல; டிரைஃபஸ் வழக்கு[99], ஸாபெர்ன் நிகழ்ச்சி[100] போன்ற எந்தவொரு அரசியல் நெருக்கடியின் விளைவாகவோ அன்றி ஒரு ஒடுக்கப்பட்ட தேசம் பிரிந்து போவது பற்றிய பொது வாக்கெடுப்பு சம்பந்தமாகவோ, மற்றபடியோ அது வெடித்தெழலாம்.

ஏகாதிபத்தியத்தின்கீழ் தேசிய ஒடுக்கல்முறை தீவிரமடைகிறது, ஆதலால் சமூக-ஜனநாயகவாதிகள் தேசங்கள் பிரிந்து செல்லும் உரிமைக்கான—முதலாளி வர்க்கத்தினர் மொழியில் ''கற்பனை''—போராட்டத்தை நிராகரிக்க வேண்டும் என்பதல்ல பொருள்; மாறுக, முதலாளி வர்க்கத்துக்கெதிரான பொது மக்களின் நடவடிக்கைக்கும், புரட்சிகரத் தாக்குதல்களுக்கும் விளைநிலமாக இத்துறையில் எழும் பூசல்களையும் கூட மேலும் அதிகமாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

### 3. சுயநிர்ணய உரிமையின் முக்கியத்துவமும் கூட்டாட்சியுடன் அதன் உறவும்

தேசங்களின் சுயநிர்ணய உரிமை என்பது அரசியல் வழியில் சுதந்திரம் பெறும் உரிமையை, ஒடுக்கும் தேசத்திலிருந்து அரசியல் வழியில் சுதந்திரமாகப் பிரிந்து போகும்

உரிமை ஒன்றைத்தான் குறிக்கிறது. திட்டவட்டமாகச் சொன்னால், அரசியல் ஜனநாயகம் என்ற இந்தக் கோரிக்கையின் உட்பொருள், பிரிந்து போவதற்காகக் கிளர்ச்சி செய்ய முழுச் சுதந்திரமும் பிரிந்து போகும் தேசம் பிரிந்து போவது பற்றிய பிரச்சினைக்குப் பொது வாக்கெடுப்பு மூலம் முடிவு எடுப்பதற்கான சுதந்திரமும் என்பதுதான். எனவே இந்தக் கோரிக்கையும், பிரிய வேண்டும், துண்டாக வேண்டும், சிறு அரசுகள் அமைய வேண்டும் என்கிற கோரிக்கையும் சமமல்ல. எல்லாவிதமான தேசிய ஒடுக்கலையும் எதிர்க்கும் போராட்டத்தின் முரணற்ற வெளியீட்டைத்தான் அது குறிக்கிறது. ஒரு ஜனநாயக அரசமைப்பு பிரிந்து போவதற்கான முழுச் சுதந்திரத்தை எவ்வளவுக்கெவ்வளவு அதிகமாக அளித்திருக்கிறதோ, அவ்வளவுக்கவ்வளவு பிரிவினைக்கான விருப்பம் தெரிவிப்பதும் அதில் ஆர்வம் காட்டுவதும் நடைமுறையில்குறையும்; ஏனென்றால் பொருளாதாரமுன்னேற்றம், மக்களின் நலன்கள் என்ற இரு நோக்குநிலைகளினின்று பார்த்தாலும் பேரரசுகளில் மறுக்க முடியாத அனுகூலங்கள் இருக்கின்றன; மேலும், முதலாளித்துவத்தின் வளர்ச்சியோடு இந்த அனுகூலங்களும் அதிகரிக்கின்றன. சுயநிர்ணய உரிமையை ஏற்றுக் கொள்வது, ஒரு கோட்பாடு என்ற முறையில் கூட்டாட்சியை ஏற்றுக் கொள்வதற்குச் சமமல்ல. ஒருவர் அக்கோட்பாட்டை உறுதியாக எதிர்ப்பவராகவும், ஜனநாயக மையப்பாட்டை ஆதரிப்பவராகவும் இருக்கலாம்; ஆயினும், முழுமையான ஜனநாயக மையப்பாட்டை அடைவதற்குரிய ஒரே வழி என்ற முறையில் தேசங்களின் ஏற்றத் தாழ்வுகளைவிடக் கூட்டாட்சி நல்லதென்று விரும்பலாம். இதே கண்ணோட்டத்துடன்தான் மையவாதியான மார்க்ஸ், ஆங்கிலேயர்கள் அயர்லாந்தை வன்முறையில் அடிமைப்படுத்தி வைத்திருந்ததைவிட அயர்லாந்தும் இங்கிலாந்தும் சேர்ந்த ஒரு கூட்டாட்சி மேலானது என்று கருதினார்.

சோஷலிஸத்தின் குறிக்கோள் மனித சமுதாயம் சின்னஞ்சிறு அரசுகளாகப் பிரிந்துள்ளதையும் தேசங்களின் எல்லாவிதமான தனிமைப்பட்ட நிலையையும் முடிவுக்குக் கொண்டுவருவது தேசங்களை மேலும் நெருங்கி வரச் செய்வது என்





பதோடு மட்டுமல்லாமல், அவற்றை ஒருமைப்படுத்துவதும் அதன் நோக்கமாகும். இந்த நோக்கத்தை அடைவதற்காகத்தான் நாம் இரண்டு காரியங்களைச் செய்ய வேண்டும். ஒரு புறம், ''பண்பாடு-தேசியத் துறைகளில் சுயாட்சி[101]'' என்பதைப் பற்றி ரென்னர், ஒட்டோ பௌவர் ஆகியவர்களது கருத்தின் பிற்போக்குத் தன்மையை மக்களுக்கு விளக்க வேண்டும்; மறுபுறம், பொதுவான தெளிவற்ற சொற்றொடர்களிலல்ல, அர்த்தமற்ற வாய்வீச்சுகளிலல்ல, சோஷலிஸத்தை அடைந்த பின்னர் கவனிக்க வேண்டிய பிரச்சினை என்று அதை ''ஒதுக்கி வைத்துவிடும்'' முறையிலல்ல, ஒடுக்கும் தேசங்களிலுள்ள சோஷலிஸ்டுகளின் பாசாங்குத் தனத்தையும் கோழைத் தனத்தையும் தனிவகையில் கவனத்தில் கொண்டு தெளிவாகவும் துல்லியமாகவும் வரையறுக்கப்பட்ட அரசியல் வேலைத்திட்டத்தில் ஒடுக்கப்பட்ட தேசங்களின் விடுதலையைக் கோர வேண்டும். எவ்வாறு ஒடுக்கப்பட்ட வர்க்கத்தின் சர்வாதிகாரம் என்ற இடைநிலைக் காலகட்டத்தின் மூலமாகத்தான் வர்க்கங்களை மனித சமுதாயம் ஒழிக்க முடியுமோ அதேபோல, ஒடுக்கப்பட்ட எல்லாத் தேசங்களுக்கும் முழு விடுதலை என்ற—அதாவது, பிரிந்து போவதற்கான சுதந்திரம் உண்டு என்ற—இடைநிலைக் காலகட்டத்தின் மூலம்தான் தேசங்களின் தவிர்க்க முடியாத ஒன்றிணைப்பை அடைய முடியும்.

## 4. புரட்சிகர-பாட்டாளி வர்க்க முறையில் தேசங்களின் சுயநிர்ணயப் பிரச்சினையை முன்வைத்தல்

தேசங்களின் சுயநிர்ணயக் கோரிக்கையை மட்டுமின்றி, நமது குறைந்தபட்ச ஜனநாயக வேலைத்திட்டத்தின் எல்லா அம்சங்களையும்கூடச் சிறு முதலாளி வர்க்கத்தினர் நீண்ட காலத்திற்கு முன்பே, பதினேழாம், பதினெட்டாம் நூற்றாண்டுகளிலேயே முன்வைத்திருக்கிறார்கள். மேலும் கற்பனை முறையில்தான் இன்னமும் அவற்றை எல்லாம் முன்வைத்து

வருகிறார்கள்; ஏனென்றால் வர்க்கப் போராட்டத்தையும் ஜனநாயகத்தின் கீழ் அது தீவிரமடைதலையும் அவர்கள் காணத் தவறுகிறார்கள், ''அமைதியான'' முதலாளித்துவத்தில் அவர்கள் நம்பிக்கை வைத்திருக்கிறார்கள். ஏகாதிபத்தியத்தின் கீழ் சம உரிமையுடைய தேசங்களின் ஐக்கியம் சாத்தியமாகும் என்ற கற்பனாவாதத்தின் இயல்பு இதுவேதான் —இக்கற்பனாவாதம் மக்களை ஏமாற்றுகிறது, காவுத்ஸ்கிவாதிகளால் ஆதாரிக்கப்படுகிறது. இந்தச் சிறு முதலாளித்துவ, சந்தர்ப்பவாதக் கற்பனாவாதத்துக்கு எதிராக, ஏகாதிபத்தியத்தின்கீழ் ஒடுக்கும் தேசங்கள், ஒடுக்கப்படும் தேசங்கள் என்று பிரிக்கப்படுவது அடிப்படையானது, கவனிக்கத்தக்க முக்கியம் வாய்ந்தது, தவிர்க்க முடியாதது என்ற கூற்றை சமூக-ஜனநாயகவாதிகளின் வேலைத்திட்டம் எடுத்துரைக்க வேண்டும்.

பிற நாடுகளைக் கைப்பற்றி இணைத்துக் கொள்வதற்கெதிராகவும், பொதுப்படையாகத் தேசங்களின் சம உரிமைகளுக்கு ஆதரவாகவும் அமைதிவாதியாகிய முதலாளி வர்க்கத்தினன் வழக்கமாகத் திரும்பத் திரும்பச் சொல்லக் கூடிய அதே பொதுவான, ஒரே மாதிரியான சொற்களை ஒடுக்கும் தேசங்களின் பாட்டாளி வர்க்கம் தானும் கூறுவதுடன் நின்றுவிடக் கூடாது. தேசிய ஒடுக்குமுறையின் அடிப்படையில் ஏற்படுத்தப்பட்ட ஒரு அரசின் எல்லைகளைப் பற்றிய பிரச்சினையில்—ஏகாதிபத்திய முதலாளி வர்க்கத்துக்கு இப்பிரச்சினை மிகவும் ''கசப்பானது''—பாட்டாளி வர்க்கம் மௌனமாயிருக்க முடியாது. ஒரு குறிப்பிட்ட அரசின் எல்லைகட்குள் ஒடுக்கப்பட்ட தேசங்கள் பலவந்தமாகப் பிடித்து வைத்துக் கொள்ளப்பட்டிருக்கிறதற்கு எதிராகப் பாட்டாளி வர்க்கத்தால் போராடாமல் இருக்க முடியாது, அதாவது சுயநிர்ணய உரிமைக்காகப் போராடாமல் இருக்க முடியாது. ''தங்களது'' தேசத்தினால் ஒடுக்கப்படும் காலனிகளுக்கும் தேசங்களுக்கும் அரசியல் வழியில் பிரிந்து போகும் சுதந்திரம் தரப்பட வேண்டும் என்று பாட்டாளி வர்க்கம் கோர வேண்டும். இல்லாவிட்டால் பாட்டாளி வர்க்கச் சர்வதேசியம் என்பது வெற்றுவார்த்தையாக இருக்கும்; ஒடுக்கப்



பட்ட தேசத்தின் தொழிலாளர்கட்கும் ஒடுக்கும் தேசத்தின் தொழிலாளர்கட்கும் இடையில் நம்பிக்கையோ அல்லது வர்க்க ஒருமைப்பாடோ அப்பொழுது சாத்தியமில்லை; சீர்திருத்தவாதிகளும் காவுத்ஸ்கிவாதிகளும் சுயநிர்ணயத்தை ஆதரித்து, அதே சமயத்தில் ''தமது சொந்த'' தேசத்தினால் ஒடுக்கப்பட்டு, ''தம்முடைய சொந்த'' அரசுக்குள் பலவந்தமாகப் பிடித்து வைக்கப்பட்டுள்ள தேசங்களைப் பற்றி மௌனமாக இருக்கிறார்களே, இவர்களின் பாசாங்குத்தனமும் அப்பொழுது அம்பலப்படுத்தப்படாமல் இருந்துவிடும்.

மற்றொரு பக்கத்தில், ஒடுக்கப்பட்ட தேசத்தின் தொழிலாளர்களுக்கும் ஒடுக்கும் தேசத்தின் தொழிலாளர்களுக்கும் இடையிலான முழுமையான, நிபந்தனையற்ற ஒற்றுமையை—நிறுவன ஒழுங்கமைப்பு ஒற்றுமை உட்பட—ஆதரித்துக் காத்து, செயல்படுத்துவது ஒடுக்கப்பட்ட தேசத்தைச் சேர்ந்த சோஷலிஸ்டுகள் குறிப்பாகச் செய்ய வேண்டியதாகும். இதைச் செய்யாமல், பாட்டாளி வர்க்கத்தின் சுதந்திரமான கொள்கையை ஆதரித்துக் காப்பது சாத்தியமில்லை; முதலாளி வர்க்கத்தினரின் எல்லாவிதமான சூழ்ச்சிகளையும் துரோகத்தையும் ஏமாற்றுவித்தைகளையும் எதிர்த்து மற்ற நாடுகளின் பாட்டாளி வர்க்கத்துடன் தங்களது வர்க்க ஒருமைப்பாட்டை ஆதரித்துக் காப்பதும் சாத்தியமில்லை. தொழிலாளர்களை ஏமாற்றுவதற்காகத் தேசிய விடுதலை பற்றிய முழக்கங்களை ஒடுக்கப்பட்ட தேசங்களின் முதலாளி வர்க்கத்தினர் விடாப்பிடியாக உபயோகித்து வருகிறார்கள்; ஆதிக்கம் செலுத்தும் தேசத்தின் முதலாளி வர்க்கத்துடன் பிற்போக்குத் தனமான ஒப்பந்தங்களைச் செய்து கொள்வதற்காகத் தங்களது உள்நாட்டுக் கொள்கையில் இம்முழக்கங்களை அவர்கள் பயன்படுத்துகிறார்கள் (எடுத்துக்காட்டாக: யூதர்களையும் உக்ரேனியர்களையும் ஒடுக்குவதற்காக ஆஸ்திரியாவிலும் ருஷ்யாவிலும் உள்ள போலந்துக்காரர்கள் பிற்போக்குடன் ஒப்பந்தம் செய்து கொள்கிறார்கள்); தங்களது அயல்நாட்டுக் கொள்கையில், தங்களது கொள்ளைத் திட்டங்களை நிறைவேற்றிக் கொள்வதற்காகப் போட்டி ஏகாதிபத்திய அரசுகளுள் ஒன்றுடன் ஒப்பந்தம் செய்து கொள்ள

அவர்கள் முயல்கிறார்கள் (சிறு பால்கன் அரசுகளின் கொள்கைப் போக்கு, முதலியன).

ஒரு ஏகாதிபத்திய நாட்டுக்கு எதிரான தேசிய விடுதலைப் போராட்டத்தை இன்னொரு ''பெரிய'' வல்லரசு தனது சொந்த ஏகாதிபத்திய நோக்கங்களுக்காகக் குறிப்பிட்ட சூழ்நிலைகளில் பயன்படுத்திக் கொள்ளக்கூடும் எனும் ஒரு காரணம்கூட சமூக-ஜனநாயகவாதிகள் தேசங்களின் சுயநிர்ணய உரிமையங்கிகாரத்தை மறுக்கும்படிக் கட்டாயப்படுத்தாது ஏனெனில் இதேபோல் அரசியல் ஏமாற்றுக்காகவும் நிதிக் கொள்ளைக்காகவும் பல தடவை முதலாளித்துவ வர்க்கத்தினர் குடியரசு முழக்கங்களைப் பயன்படுத்துகிறார்கள் (உதாரணம்: லத்தீன் நாடுகளில்). எனினும் இந்தக் காரணத்துக்காக சமூக-ஜனநாயகவாதிகள் தங்களது குடியரசுக் கொள்கையை விட்டுவிடப் போவதில்லை.*

---

* ''தாய்நாட்டைப் பாதுகாப்பது'' என்பதை இது உட்கிடையாகக் கொண்டுள்ளது என்ற காரணத்தைக் கொண்டு சுயநிர்ணய உரிமையை மறுப்பது முற்றிலும் நகைக்கத்தக்கது என்பது சொல்லாமலே விளங்கும். ''தாய்நாட்டைப் பாதுகாப்பதைச்'' சரியென்று சாதிப்பதற்கென்று, 1914-16ம் ஆண்டு காலத்து சமூக-தேசியவெறியர்கள் ஜனநாயகக் கோரிக்கைகளைப் பற்றியும் (உதாரணமாக, அதன் குடியரசுவாதம் பற்றி) தேசிய ஒடுக்குமுறைக்கெதிரான எப்போராட்டத்தையும் வகுப்பது பற்றியும் பேசும் பொழுதெல்லாம் அதே உரிமையுடன், அதாவது அதேபோன்று விளையாட்டாகப் பேசுகின்றனர். தனிப்பட்ட ஒவ்வொரு போரின் திட்டவட்டமான வரலாற்றுச் சிறப்பியல்புகளைப் பகுத்தாய்ந்தே மார்க்ஸியமானது ஐரோப்பாவில் நடைபெற்ற மாபெரும் பிரெஞ்சுப் புரட்சி அல்லது காரிபல்டியின் போர்கள் போன்றவை தாயகத்தைப் பாதுகாப்பதை நோக்கமாகக் கொண்டவை என்றும், 1914-16ம் ஆண்டுகளின் ஏகாதிபத்திய யுத்தம் தாயகத்தின் பாதுகாப்பை நோக்கமாகக் கொள்ளவில்லை என்றும் முடிவுசெய்கிறதே அன்றி எந்த ஒரு ''பொதுக் கோட்பாட்டையோ'' அல்லது ஒரு வேலைத்திட்டத்தின் எந்த ஒரு அம்சத்தையோ கொண்டு இவ்வாறு முடிவு செய்யவில்லை.



## 5. தேசியப் பிரச்சினை பற்றி மார்க்ஸியமும் புரூதோனியமும்

விதிவிலக்கின்றி ஒவ்வொரு ஜனநாயகக் கோரிக்கையும் சார்பற்ற தனித்த வெளியீடு அல்ல, நிலப்பிரபுத்துவத்துக்கெதிராக முதலாளி வர்க்கத்தால் தலைமை தாங்கி நடத்தப்படும் பொதுமக்கள் போராட்டத்தின் வரலாற்று வழிப்பட்ட வெளியீடே என்று சிறு முதலாளித்துவ ஜனநாயகவாதிகளுக்கு மாறாக மார்க்ஸ் கருதினார். இக்கோரிக்கைகள் அனைத்துமே விதிவிலக்கின்றி, குறித்த சூழ்நிலைகளில், தொழிலாளர்களை ஏமாற்றுவதற்காக முதலாளி வர்க்கத்தினரின் கருவிகளாகப் பயன்பட முடியும், பயன்பட்டிருக்கின்றன. இவ்விஷயத்தில் அரசியல் ஜனநாயகத்தின் கோரிக்கைகளில் ஒன்றை—குறிப்பாக, தேசங்களின் சுயநிர்ணயத்தை—தனிப்பட்டதாக எடுத்துக் கொண்டு, மற்றவைகளுக்கு எதிரானதாக அதை வைப்பது தத்துவார்த்த வழியில் அடிப்படையான தவறாகும். நடைமுறையில், பாட்டாளி வர்க்கமானது ஜனநாயகக் கோரிக்கைகளுக்கான—குடியரசு ஒன்றை நிறுவ வேண்டும் என்ற கோரிக்கையையும் விலக்கிவிடாமல்—தனது போராட்டத்தை, முதலாளி வர்க்கத்தைக் கவிழ்ப்பதற்கான தனது புரட்சிப் போராட்டத்துக்குக் கீழ்ப்பட்டதாக வைத்துக் கொண்டால்தான் அது தனது சுதந்திர நிலையைக் காப்பாற்றிக் கொள்ள முடியும்.

''சமுதாயப் புரட்சி என்ற பெயரில்'' தேசியப் பிரச்சினையை ''மறுத்தார்கள்'' புரூதோன்வாதிகள். ஆனால் அதற்கு மாறாக மார்க்ஸ், முன்னேறிய நாடுகளில் பாட்டாளி வர்க்கப் போராட்டத்தின் நலன்களை முதலில் கருத்தில் கொண்டு, பிற தேசங்களை ஒடுக்குகின்ற எந்த ஒரு தேசம் சுதந்திரமாயிருக்க முடியாது என்ற அடிப்படையான சர்வதேசிய, சோஷலிஸக் கோட்பாட்டுக்கு முதலிடம் தந்தார். ஜெர்மனியில் வெற்றிவாகை சூடிய ஜனநாயகம் ஜெர்மானியர்களால் ஒடுக்கப்பட்ட தேசங்களுக்கு விடுதலை பிரகடனம் செய்து அப்பிரகடனத்தை நிறைவேற்றும்படி 1848ல் ஜெர்மன் தொழி

லாளர்களின் புரட்சி இயக்கத்தின் நலன்களைக் கருத்தில் கொண்டு மார்க்ஸ் கோரினார். அதே போல ஆங்கிலேயத் தொழிலாளர்களின் புரட்சிப் போராட்டத்தின் நலன்களைக் கருத்தில் கொண்டு, இங்கிலாந்திலிருந்து அயர்லாந்து பிரிய வேண்டும் என்று 1869ல் மார்க்ஸ் கோரினார்; ஆனாலும் ''பிரிவுக்குப் பிறகு ஒருவேளை கூட்டாட்சி ஏற்படலாம்'' என்று அத்துடன் கூறினார்.[102] இந்தக் கோரிக்கையை முன் வைத்துத்தான் மார்க்ஸ் ஆங்கிலேயத் தொழிலாளர்களுக் குச் சர்வதேசிய உணர்வை உண்மையில் ஊட்டி வந்தார். இம்முறையில்தான் அவர் சந்தர்ப்பவாதிகளையும் முதலாளித் துவச் சீர்திருத்தவாதத்தையும் எதிர்த்து இந்த வரலாற்றுப் பணிக்குப் புரட்சித் தீர்வு ஒன்றைக் காட்ட முடிந்தது—அரை நூற்றாண்டு ஆகியும், அவர்கள் இன்றுங்கூட அயர்லாந்து ''சீர்திருத்தத்தை'' நிறைவேற்றவில்லை. சிறிய தேசங்களுக்குப் பிரிந்து போகும் சுதந்திரம் கற்பனைத்துவமானது, நிறைவேற்ற முடியாதது என்பது பற்றியும் பொருளாதாரக் குவிப்பு மட்டுமின்றி அரசியல் குவிப்புங்கூட முற்போக்கா னது என்பது பற்றியும் கூச்சலிடும் மூலதனத்தை ஆதரித்துப் புகழ்வோருக்கு மாறாக இம்முறையில்தான் மார்க்ஸால், ஏகாதி பத்திய அல்லாத வழியில் இக்குவிப்பின் முற்போக்குத் தன்மையையும், வன்முறையின் அடிப்படையில் அன்றி, அனைத்து நாடுகளையும் சேர்ந்த பாட்டாளி வர்க்கத்தினரின் சுதந்திரமான ஐக்கியத்தின் அடிப்படையில் தேசங்களின் ஒன்றுபடுதலையும் ஆதரித்துப் பாதுகாக்க முடிந்தது. இவ் வழியில்தான், தேசங்களின் சமவுரிமை, சுயநிர்ணயம் ஆகி யவற்றை வெறும் பேச்சளவிலும் பல நேரங்களில் கபட மனத்துடனும் அங்கீகரிப்போருக்கு மாறாக தேசியப் பிரச்சி னையிலும்கூட பொது மக்களின் புரட்சிகரமான நடவடிக் கையை மார்க்ஸால் முன்வைக்க முடிந்தது. 1914-16ம் ஆண்டு களின் ஏகாதிபத்தியப் போரும், அதன் விளைவாக வெளிக்கு வந்த சந்தர்ப்பவாதிகளின், காவுத்ஸ்கிவாதிகளின் மிகவும் இழிவான கபடவாதமும் மார்க்ஸின் கொள்கை சரியானது என்பதைத் தெள்ளத் தெளிவாக உறுதிப்படுத்திவிட்டன. இக்கொள்கை எல்லா முன்னேறிய நாடுகளுக்கும் முன்



னுதாரணமாக விளங்க வேண்டும், ஏனெனில் அவை ஒவ் வொன்றும் மற்ற தேசங்களை ஒடுக்குகின்றன.*

## 6. தேசங்களின் சுயநிர்ணயம் பற்றிய பிரச்சினையில் மூன்றுவித நாடுகள்

இது பொருத்தவரை நாடுகளை மூன்று முக்கிய விதங் களாகப் பிரிக்க வேண்டும்.

முதலாவதாக, மேற்கு ஐரோப்பாவைச் சேர்ந்த முன் னேறிய முதலாளித்துவ நாடுகளும் அமெரிக்க ஐக்கிய நாடு களும். இந்நாடுகளில் முதலாளித்துவ-முற்போக்கான தேசிய இயக்கங்கள் நெடு நாட்களுக்கு முன்பே முடிவுக்கு வந்து விட்டன. இந்த ''மாபெரும்'' தேசங்கள் ஒவ்வொன்றும் காலனிகளிலும் தனது நாட்டிலும் உள்ள மற்ற தேசங்களை ஒடுக்குகிறது. பத்தொன்பதாம் நூற்றாண்டில் அயர்லாந்து சம்பந்தமாக ஆங்கிலேயப் பாட்டாளி வர்க்கத்தின் கட

* சில மக்களினங்களது தேசிய இயக்கத்தை, உதாரணமாக 1848ம் ஆண்டின் செக் மக்களின் இயக்கத்தை, மார்க்ஸ் எதிர்த்தார். அண்மையில் ஜெர்மன் தேசியவெறியினராகிய லென்ச் என்பவர் *Die Glocke* சஞ்சிகையின்[103] இதழ்கள் 8-9ல் அதைச் சுட்டிக்காட்டி, மார்க்ஸியத்தின் . நோக்கு நிலையிலிருந்து தேசங்களின் சுயநிர்ணயத்தை அங்கீகரிக்க வேண்டியதன் அவசியத்தை மறுத்தார். ஆனால் இது சரி யல்ல; ஏனென்றால், 1848ல் ''பிற்போக்குத்'' தேசங்களையும் புரட்சிகர-ஜனநாயகத் தேசங்களையும் வேறுபடுத்தத் தே வையான வரலாற்று, அரசியல் காரணங்கள் இருந்தன. மார்க்ஸ் முதலில் கூறப்பட்ட தேசங்களைக் கண்டனம் செய்து, பிந்தியவற்றை ஆதரித்தது சரியே. ஜனநாயகக் கோரிக்கைகளுள் ஒன்றான சுயநிர்ணய உரிமையானது ஜன நாயகத்தின் பொதுவான நலன்களுக்குக் கீழ்ப்பட்டதாக இருக்க வேண்டும். 1848லும் அதற்கடுத்த ஆண்டுகளிலும் ஜாரிஸத்தை எதிர்த்துப் போராடுவதில்தான் இந்தப் பொது வான நலன்கள் அடங்கியிருந்தன.

மைகள் என்னவோ, அவையே இந்த ஆளும் தேசங்களைச் சேர்ந்த பாட்டாளி வர்க்கத்தின் கடமைகளும் ஆகும்.*

இரண்டாவதாக, கிழக்கு ஐரோப்பா—ஆஸ்திரியா, பால்கன் நாடுகள், குறிப்பாக ருஷ்யா. இங்கு இருபதாம் நூற்றாண்டுதான் முதலாளித்துவ-ஜனநாயகத் தேசிய இயக்கங்களைப் பெருமளவுக்கு வளர்த்து, தேசியப் போராட்டத்தைத் தீவிரப்படுத்தியது. இந்நாடுகளின் பாட்டாளி வர்க்கமானது தேசங்களின் சுயநிர்ணய உரிமைக்கு ஆதரவாகப் போராடுவதன் வாயிலாக அன்றி தனது நாட்டில் முதலாளித்துவ-ஜனநாயகப் புனரமைப்பு நிறைவு எய்துவதற்கும், மற்ற நாடுகளின் சோஷலிஸப் புரட்சிக்கு உதவுவதற்குமான தனது பணிகளை நிறைவேற்ற முடியாது. இதில் மிகவும் கடினமான, மிகவும் முக்கியமான பணியானது, ஒடுக்கும் தேசங்களின்

* 1914-16ம் ஆண்டுகளின் போரிலிருந்து ஒதுங்கி நின்ற சிறிய அரசுகள் சிலவற்றில்—உதாரணமாக, ஹாலந்திலும் ஸ்விட்ஸர்லாந்திலும்—முதலாளி வர்க்கத்தினர் ''தேசங்களின் சுயநிர்ணயம்'' என்ற முழக்கத்தை அதிகமாகப் பயன்படுத்தி ஏகாதிபத்திய போரில் பங்கு கொள்வதை மெய்ப்பிக்கிறார்கள். இத்தகைய நாடுகளின் சமூக-ஜனநாயகவாதிகளை சுயநிர்ணயத்தையே மறுக்கத் தூண்டிய நோக்கங்களில் இதுவும் ஒன்று. ஏகாதிபத்தியப் போரில் ''தாய்நாட்டைப் பாதுகாப்பது'' என்பதை மறுக்கும் சரியான பாட்டாளி வர்க்கக் கொள்கை தவறான வாதங்களைக் கொண்டு ஆதரிக்கப்படுகிறது. தத்துவார்த்த வழியில் அதன் விளைவு மார்க்ஸியத்தைத் திருத்துவதாகும்; நடைமுறையில் இது ஒரு தனிவகையான சிறு தேசிய இனக் குறுகிய மனப்பான்மைக்கும் ''பெருவல்லரசுகளான'' தேசங்களால் அடிமைப்படுத்தப்பட்டிருக்கும் தேசங்களின் கோடிக்கணக்கான மக்களை மறக்கும்படியான ஒரு நிலைக்கும் இட்டுச் செல்லுவதாகும். தோழர் கோர்ட்டர் தனது ஏகாதிபத்தியம், போர், மற்றும் சமூக-ஜனநாயகவாதம் என்னும் மிகச் சிறந்த சிறுநூலில் தேசங்களின் சுயநிர்ணயக் கோட்பாட்டைத் தவறாக மறுக்கிறார். ஆனால், டச்சு இந்தியத் தீவுகளுக்கு ''அரசியல், தேசிய விடுதலை'' உடனடியாகத் தரப்பட வேண்டும் என்று அவர் கோரி, இக்கோரிக்கையை முன்வைத்து அதற்காகப் போராட மறுக்கும் டச்சு சந்தர்ப்பவாதிகளை அம்பலப்படுத்துகையில் அதைச் செயல்முறையில் சரியாகக் கையாளுகிறார்.



தொழிலாளர்களது வர்க்கப் போராட்டத்தை ஒடுக்கப்பட்ட தேசங்களின் தொழிலாளர்களது போராட்டத்துடன் ஒன்றுபடுத்தல்தான்.

மூன்றாவதாக, சீனா, பாரசீகம், துருக்கி போன்ற அரைக்காலனி நாடுகளும் இதர காலனி நாடுகள் அனைத்தும். இந்நாடுகளின் மொத்த மக்கட்தொகை 100 கோடி. இந்நாடுகளில் முதலாளித்துவ-ஜனநாயக இயக்கங்கள் இப்பொழுதுதான் தொடங்கியுள்ளன; அல்லது அவை முடிவு பெற இன்னும் நெடுநாட்கள் பிடிக்கும். சோஷலிஸ்டுகள், இழப்பீடோ நிபந்தனைகளோ அற்ற, காலனிகளின் உடனடியான விடுதலை மட்டும் கோருவது கூடாது—ஆம், இந்தக் கோரிக்கை அதன் அரசியல் பொருளில் சுயநிர்ணய உரிமையை அங்கீகரித்தல் என்பது தவிர வேறெதுவும் இல்லை; சோஷலிஸ்டுகள் இந்நாடுகளில் முதலாளித்துவ-ஜனநாயக, தேசிய விடுதலை இயக்கங்களின் மிகவும் புரட்சிகரமான கூறுகளைத் தீர்மானமான வகையில் ஆதரிக்க வேண்டும், தங்களை ஒடுக்கும் ஏகாதிபத்திய அரசுகளுக்கு எதிரான இக்கூறுகளின் எழுச்சிக்கும், ஒரு புரட்சிப் போர் இருக்குமேயானால் இப்போருக்கும், உதவ வேண்டும்.

## 7. சமூக-தேசியவெறியும் தேசங்களின் சுயநிர்ணயமும்

ஏகாதிபத்திய சகாப்தமும் 1914-16ம் ஆண்டுகளின் போரும் முன்னேறிய நாடுகளில் தேசியவெறிவாதத்துக்கும் தேசியவாதத்துக்கும் எதிரான போராட்டப் பணியின் தேவையை வலியுறுத்தி முன்வைத்தன. தேசங்களின் சுயநிர்ணயப் பிரச்சினை பற்றி சமூக-தேசியவெறியர்கள் மத்தியில்—''தாய்நாட்டின் பாதுகாப்பு'' என்ற கோட்பாட்டைப் பயன்படுத்தி இந்தப் போரின் ஏகாதிபத்திய, பிற்போக்குத் தன்மையை மூடி மறைக்கும் சந்தர்ப்பவாதிகள், காவுத்ஸ்கிவாதிகள் ஆகியோரின் மத்தியில்—இரண்டு முக்கியமான வகையினர் காணப்படுகின்றன.

ஒரு பக்கத்தில், முதலாளி வர்க்கத்தினரின் வெளிப்படையான ஏவலார்களை நாம் காண்கிறோம்; ஏகாதிபத்தியமும் அரசியல் குவிப்பும் முற்போக்கானவை என்று கூறி, பிறநாடுகளைக் கைப்பற்றி இணைத்துக் கொள்வதை இவர்கள் ஆதரிக்கிறார்கள்; சுயநிர்ணய உரிமை என்பது கற்பனையானது, மாயக் காட்சி போன்றது, சிறுமுதலாளித்துவத் தன்மை கொண்டது என்றெல்லாம் கூறி, அதை அங்கீகரிக்க மறுக்கிறார்கள். ஜெர்மனியில் குனொவ், பார்வஸ், தீவிரச் சந்தர்ப்பவாதிகள் ஆகியோரும், இங்கிலாந்தில் சில ஃபேபியன்களும்[104] தொழிற் சங்கத் தலைவர்களும், ருஷ்யாவில் ஸெம்கோவ்ஸ்கி, லீப்மன், யுர்க்கேவிச் முதலிய சந்தர்ப்பவாதிகளும் இவ்வகையைச் சேர்ந்தவர்கள்தான்.

மறு பக்கத்தில், காவுத்ஸ்கிவாதிகளை நாம் காண்கிறோம். வண்டர்வேல்டேயும், ரெனொடேலும், பிரிட்டனையும் பிரான்ஸையும் சேர்ந்த பல அமைதிவாதிகளும், இன்னும் பலரும் இவ்வகையினர்தாம். முதல்வகை ஆட்களுடன் ஒற்றுமையை இவர்கள் விரும்புகிறார்கள்; வெறும் சொல்லளவிலும் கபடவாதமாகவும் இவர்கள் சுயநிர்ணய உரிமையை ஆதரித்த பொழுதிலும் நடைமுறையில் முதல் வகையினருடன் ஒன்றுபடுகின்றனர். அரசியல் வழியில் தனியே பிரிந்து போவதற்குரிய சுதந்திரம் பற்றிய கோரிக்கை ''அளவு கடந்தது'' ("zu viel verlangt": *1915, மே 21ந் தேதிய Die Neue Zeit* இல்[105] Kautsky) என்று இவர்கள் கருதுகிறார்கள்; குறிப்பாக ஒடுக்கும் தேசங்களின் சோஷலிஸ்டுகள் புரட்சிகரமான போர்த்தந்திரங்களை மேற்கொள்வதன் தேவையை இவர்கள் வற்புறுத்தவில்லை; அதற்கு மாறாக அவர்களது புரட்சிக் கடமைகளை மூடிமழுப்பி, அவர்களது சந்தர்ப்பவாதத்தை மெய்ப்பித்து, அவர்கள் மக்களை ஏய்ப்பதை எளிதாக்குகிறார்கள்; தங்கள் ஆட்சிக்குள் முழு உரிமை பெறாத தேசங்களை வன்முறையில் பிடித்து வைத்திருக்கும் அரசுகளின் எல்லைக்கோடுகள் பற்றிய பிரச்சினையை விட்டே விலகிச் செல்லுகிறார்கள்.

இரு வகையினருமே ஒரே அளவில் சந்தர்ப்பவாதிகள் தான்; அயர்லாந்தை உதாரணமாகக் கூறி மார்க்ஸ் விளக்கிய



போர்த்தந்திரத்தின் தத்துவார்த்த முக்கியத்துவத்தையும் நடைமுறை இன்றியமையாமையையும் புரிந்து கொள்ளும் திறனை அவர்கள் அறவே இழந்து மார்க்ஸியத்தைக் களங்கப்படுத்துகிறார்கள்.

பிறநாடுகளைக் கைப்பற்றி இணைத்துக்கொள்ளும் பிரச்சினையை எடுத்துக் கொண்டால், போரின் காரணமாக இப்பிரச்சினை குறிப்பாக உடனடிக் கவனம் செலுத்த வேண்டிய தொன்றாக ஆகிவிட்டது. ஆனால் பிறநாடுகளைக் கைப்பற்றி இணைத்துக் கொள்ளுதல் என்றால் என்ன? பிறநாடுகளைக் கைப்பற்றி இணைத்துக் கொள்வதை எதிர்த்து ஆட்சேபிப்பதானது தேசங்களின் சுயநிர்ணயத்தை ஏற்றுக் கொள்வதாகிறது, அல்லது தற்பொழுதைய நிலைமையை ஆதரித்துப் பேசும் அமைதிவாதிகளின் வாய்ச்சொல்லை அடிப்படையாகக் கொண்டு எவ்வித வன்முறையையும்—புரட்சிகரமான வன்முறையையும்கூட — எதிர்க்குமொன்றாகிறது என்பதைக் காண்பது மிகவும் எளிது. அத்தகைய வாய்ச்சொல் அடிவேரிலேயே தவறானது; மார்க்ஸியத்துக்கொவ்வாதது.

## 8. அடுத்துவரும் காலத்தில் பாட்டாளி வர்க்கத்தின் திட்டவட்டமான பணிகள்

சோஷலிஸப் புரட்சியானது கூடிய விரைவில் தொடங்கலாம். அப்பொழுது ஆட்சியைக் கைப்பற்றுதல், வங்கிகளைப் பறிமுதல் செய்தல், முதலிய பல சர்வாதிகார நடவடிக்கைகள் ஆகிய உடனடிப் பணிகள் பாட்டாளி வர்க்கத்தை எதிர்நோக்கி நிற்கும். இத்தகைய நேரத்தில் முதலாளி வர்க்கத்தினர்—அதிலும் குறிப்பாக ஃபேபியன், காவுத்ஸ்கிவாத வகையைச் சேர்ந்தஅறிவுத்துறையினர்—ஒரு வரம்புக்குட்பட்ட ஜனநாயக நோக்கங்களை மட்டும் புரட்சியினுள் புகுத்தி அதைப் பிளவுபடுத்தவும் தடை செய்யவும் முயல்வார்கள். முதலாளி வர்க்க ஆட்சியின் அடிப்படைகளைப் பாட்டாளி வர்க்கம் தகர்க்க ஆரம்பிக்கும் பொழுது நிலவும் நிலைமைகளில் எல்லாவிதத் தூய்மையான ஜனநா

யகக் கோரிக்கைகளும் ஓரளவுக்குப் புரட்சியைத் தடை செய்வதாக இயங்கக் கூடும். ஆயினும், எல்லா ஒடுக்கப்பட்ட மக்களுக்கும் விடுதலைப் பிரகடனம் செய்து, இதை அளிக்க வேண்டியது (அதாவது, அவர்களுடைய சுயநிர்ணய உரிமை) சோஷலிஸப் புரட்சியில் மிகமிக உடனடித் தேவை ஆகும். ஜெர்மனியில் 1848ல் அல்லது ருஷ்யாவில் 1905ல் முதலாளித்துவ-ஜனநாயகப் புரட்சி வெற்றி பெறுவதற்கு அது எவ்வாறு உடனடித் தேவை வாய்ந்ததாக விளங்கியதோ அதே போலத்தான் சோஷலிஸப் புரட்சியின் பொழுதும் விளங்கும்.

சோஷலிஸப் புரட்சி தொடங்குவதற்கு இன்னும் ஐந்து, பத்து அல்லது அதற்கும் அதிகமான ஆண்டுகள் பிடிக்கலாம். அப்போதைய நிகழ்ச்சி நிரலில் சோஷலிஸ்டுகளாகிய தேசிய வெறியினரும் சந்தர்ப்பவாதிகளும் தொழிலாளர் கட்சியைச் சேர்ந்திருத்தல் என்பதையும், 1914-16ம் ஆண்டுகளில் அவர்கள் அடைந்த வெற்றிக்குச் சமமான வெற்றியுறுதல் என்பதையும் சாத்தியமற்றதாக்கும் ஒரு புரட்சிகரமான உணர்வை பொது மக்களிடம் தூண்டும் பணி இடம் பெறும். காலனிகளுக்கும் அயர்லாந்துக்கும் பிரிந்து போகும் உரிமை வேண்டும் என்று கோராத பிரிட்டிஷ் சோஷலிஸ்டுகள்; காலனிகளுக்கும், அல்ஸேஸ், டென்மார்க், போலந்து மக்களுக்கும் பிரிந்து போகும் உரிமை வேண்டும் என்று கோராத, தேசிய ஒடுக்கல் முறைக்கெதிராகப் போராடுவதற்காகத் தமது புரட்சிப் பிரச்சாரத்தையும் புரட்சிகரப் பொது மக்கள் நடவடிக்கைகளையும் நேரடியாகப் பயன்படுத்தாத, ஸர்பெர்ன் நிகழ்ச்சி போன்றவற்றைப் பயன்படுத்தி ஒடுக்கும் தேசத்தைச் சேர்ந்த பாட்டாளி வர்க்கத்தினரிடையே தலைமறைவான பிரச்சாரம் செய்வதையும் தெரு ஆர்பாட்டங்களையும் புரட்சிகரப் பொது மக்கள் நடவடிக்கைகளையும் மேற்கொள்ளத் தவறுகிற ஜெர்மன் சோஷலிஸ்டுகள்; பின்லாந்து, போலந்து, உக்ரேய்ன் முதலியவற்றுக்குப் பிரிந்து போகும் உரிமை தரப்பட வேண்டுமென்று கோராத ருஷ்ய சோஷலிஸ்டுகள் ஆகியோர் தேசியவெறியினராகவும் இரத்தக்கறை படிந்து அழுக்கடைந்த ஏகாதிபத்திய முடியரசுகளின், ஏகாதிபத்திய முதலாளி வர்க்கத்தினரின் ஏவலர்களாகவும் நடந்து கொள்கிறார்கள் என்று சோஷலிஸ்டுகள் பொது மக்களுக்கு விளக்கிக் கூற வேண்டும்.



## 9. சுயநிர்ணயத்தின்பால் ருஷ்ய, போலந்து சமூக-ஜனநாயகவாதமும் இரண்டாவது அகிலமும் கடைப்பிடிக்கும் போக்கு

சுயநிர்ணயப் பிரச்சினைபற்றி ருஷ்யாவின் புரட்சிகரச் சமூக-ஜனநாயகவாதிகளுக்கும் போலந்து சமூக-ஜனநாயகவாதிகளுக்கும் இடையிலான வேற்றுமைகள் 1903லேயே, ருஷ்யாவின் சமூக-ஜனநாயகத் தொழிலாளர் கட்சியின் வேலைத்திட்டத்தை அங்கீகரித்த காங்கிரஸிலேயே வெளிப்படையாகத் தோன்றிவிட்டன—அக்காங்கிரஸில்தான் போலந்து சமூக-ஜனநாயகவாதிகளது பிரதிநிதிகள் ஆட்சேபித்த போதிலும் தேசங்களின் சுயநிர்ணய உரிமையைக் கூறும் 9வது பாரா வேலைத்திட்டத்தில் சேர்த்துக் கொள்ளப்பட்டது. அப்பொழுதிலிருந்து ஒருமுறைகூட வேலைத்திட்டத்திலிருந்து 9வது பாராவை நீக்கிவிட வேண்டும், அல்லது அதற்குப் பதிலாக வேறொரு வாசகத்தைப் புகுத்த வேண்டும் என்ற தங்கள் யோசனையைத் தமது கட்சியின் பெயரால் போலந்து சமூக-ஜனநாயகவாதிகள் திருப்பிக் கூறியது கிடையாது.

மொத்த மக்கட்தொகையில் 57 விழுக்காடுகளுக்குக் குறையாத—10 கோடிக்கு மேற்பட்ட—மக்கட்தொகையைக் கொண்ட ஒடுக்கப்பட்ட தேசங்களையுடைய ருஷ்யாவில், இந்தத் தேசங்கள் பெரும்பாலும் நாட்டின் எல்லைப் பகுதிகளில் உள்ள ருஷ்யாவில், இந்தத் தேசங்களில் பல பெரிய-ருஷ்யர்களைவிட பண்பாட்டுத் தரத்தில் உயர்ந்ததாய் இருக்கும் ருஷ்யாவில், அரசியல் அமைப்பு மிகவும் அநாகரிகமாகவும் மத்தியகாலத் தன்மையுடையதாகவும் இருக்கும் ருஷ்யாவில், முதலாளித்துவ-ஜனநாயகப் புரட்சி இன்னும் நிறைவு பெறாத ருஷ்யாவில் ஜாரிஸத்தினால் ஒடுக்கப்பட்ட தேசங்கள்

தங்கு தடையின்றி சுதந்திரமாகப் பிரிந்து போகும் உரிமையுடையன என ஏற்றுக் கொள்வது என்பது அவர்களுடைய ஜனநாயக, சோஷலிஸ நோக்கங்கள் பெயரால் சமூக-ஜனநாயகவாதிகளுக்கு நிபந்தனையற்ற கட்டாயமாகிறது. 1912 ஜனவரியில் மீண்டும் நிறுவப்பட்ட[106] நமது கட்சி, 1913ல் நிறைவேற்றிய ஒரு தீர்மானத்தின் மூலம் சுயநிர்ணய உரிமையை மீண்டும் வலியுறுத்தி, மேலே கூறப்பட்ட அதே திட்டவட்டமான பொருளில் விளக்கியது.[107] 1914-16ல் முதலாளி வர்க்கத்தினர் மத்தியிலும் சந்தர்ப்பவாத சோஷலிஸ்டுகளின் (ருபனோவிச், பிளெஹானவ், நாஷே தேலோ சஞ்சிகை[108] வகையரு) மத்தியிலும் தலைவிரித்தாடிய பெரிய-ருஷ்யத் தேசியவெறியானது இக்கோரிக்கையை நாம் இன்னும் அதிகமாக வலியுறுத்துவதற்கும், அதை ஏற்க மறுப்பவர்கள் நடைமுறையில் பெரிய-ருஷ்யத் தேசியவெறிக்கும் ஜாரிஸத்துக்கும் ஆதரவு தருகிறார்கள் என்ற உண்மையை உணர்ந்து கொள்வதற்கும் நம்மைத் தூண்டுகிறது. சுயநிர்ணய உரிமைக்கெதிரான நடவடிக்கைகளுக்கு நம் கட்சி சிறிதும் பொறுப்பேற்க அழுத்தந்திருத்தமாக மறுக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறது.

தேசியப் பிரச்சினை பற்றி போலந்து சமூக-ஜனநாயகவாதிகளின் நிலையை விளக்கும் அண்மைகாலத்திய வரையறுப்பில் (ஸிம்மர்வால்டு மகாநாட்டில்[109] போலந்து சமூக-ஜனநாயகவாதிகளின் அறிவிப்பு) கீழ்வரும் கருத்துக்கள் அடங்கியிருக்கின்றன:

இழப்பீடு பற்றி வரப்போகிற சூதாட்டத்தில் பணயங்கள் என்ற முறையில் ''போலந்து பிரதேசங்களை'' ஜெர்மன் அரசாங்கமும் மற்ற அரசாங்கங்களும் கருதுவதை அந்த அறிவிப்பு கண்டனம் செய்கிறது; இவ்வரசாங்கங்கள் ''போலந்து மக்கள் தங்களது விதியைத் தாங்களே தீர்மானித்துக் கொள்ளும் வாய்ப்பைப் பறிக்கின்றன'' என்று அது கூறுகிறது. ''ஒரு முழுநாடு திரும்பத் திரும்ப வெட்டப்பட்டு, துண்டு துண்டாக விநியோகம் செய்யப்படுவதை எதிர்த்துப் போலந்து சமூக-ஜனநாயகவாதம் தனது ஆட்சேபத்தைத் தீர்மானமாகவும் ஆழ்ந்த முறையிலும் தெரிவித்துக் கொள்





கிறது''... ''ஒடுக்கப்பட்ட மக்களை விடுதலை செய்யும் பொறுப்பை'' ஹோஹன்ஸோலர்ன் குலத்திடம் ஒப்படைத்து விட்ட சோஷலிஸ்டுகளை அது வெறுப்புடன் கண்டிக்கிறது. சர்வதேசப் புரட்சிகரப் பாட்டாளி வர்க்கம் நடத்தப் போகிற இந்தப் போராட்டத்தில், சோஷலிஸத்திற்கான போராட்டத்தில், பங்கு கொண்டால்தான் ''தேசிய ஒடுக்கல் முறை என்ற தளைகள் அறுபடும், எல்லாவகையான அந்நிய மேலாதிக்கம் ஒழிக்கப்படும், வெவ்வேறு நாட்டு மக்களின் கூட்டணியில் முழு உரிமை பெற்ற ஒரு உறுப்பினராகப் போலந்து மக்கள் எல்லாத் துறைகளிலும் தடையின்றி முன்னேற வழி திறக்கும்'' என்ற தனது திடநம்பிக்கையை அது வெளியிடுகிறது. ''போலந்து மக்களுக்குப்'' போரானது ''இருவகையில் சகோதரக்கொலை'' என்பதையும் அந்த அறிவிப்பு ஏற்கின்றது. (சர்வதேச சோஷலிஸ்டுக் கமிஷனின் அறிக்கை[110], இதழ் 2, செப்டம்பர் 27, 1915, பக்கம் 15; அகிலமும் போரும் என்ற கட்டுரைத் திரட்டு, பக்கம் 97ல் ருஷ்ய மொழி பெயர்ப்பைக் காணலாம்.)

இந்த அடிப்படைக் கருத்துக்கள் தேசங்களின் சுயநிர்ணய உரிமையை ஏற்றுக் கொள்வதிலிருந்து உட்கருத்தில் வேறுபடவில்லை; இரண்டாவது அகிலத்தின் பெரும்பான்மையான வேலைத்திட்டங்கள், தீர்மானங்கள்[111] ஆகியவற்றைக் காட்டிலும் இவை அரசியல் வரையறுப்புகளின் தெளிவின்மையும் உறுதியின்மையும் கொண்டதாக இருக்கின்றன என்பதே அவற்றின் குறை. துல்லியமான அரசியல் வரையறுப்புகளிலும் இக்கருத்துக்களை வெளியிடுவதற்கும் முதலாளித்துவ அமைப்புக்கோ அல்லது சோஷலிஸ அமைப்புக்கு மட்டுமோ இக்கருத்துக்கள் பொருத்தமானது என்பதைக் காட்டுவதற்கும் செய்யும் ஒவ்வொரு முயற்சியும் தேசங்களின் சுயநிர்ணயத்தை மறுப்பதில் போலந்து சமூக-ஜனநாயகவாதிகள் செய்யும் தவற்றை இன்னும் தெளிவாக விளக்கும்.

தேசங்களின் சுயநிர்ணயத்தை ஏற்றுக் கொண்ட 1896ம் ஆண்டின் லண்டன் சர்வதேச சோஷலிஸ்டுக் காங்கிரஸ் தீர்மானத்தில் மேலே கூறப்பட்ட ஆய்வுரைகளை அடிப்படையாகக் கொண்டு கீழ்வருவனவற்றைப் பற்றிய ஆணைக்

குறிப்புகள் சேர்த்துக் கொள்ளப்பட வேண்டும்: (1) ஏகாதிபத்தியத்தின்கீழ் இக்கோரிக்கை முன்வைக்கப்படுவதின் இன்றியமையாத் தேவை; (2) இக்கோரிக்கை உள்ளிட்ட அரசியல் ஜனநாயகக் கோரிக்கைகள் எல்லாவற்றின் அரசியல் சார்புத் தன்மையும் வர்க்க உள்ளடக்கமும்; (3) ஒடுக்கும் தேசங்களைச் சேர்ந்த சமூக-ஜனநாயகவாதிகளின் திட்டவட்டமான பணிகளையும் ஒடுக்கப்பட்ட தேசங்களைச் சேர்ந்த சமூக-ஜனநாயகவாதிகளின் திட்டவட்டமான பணிகளையும் வேறுபடுத்திக் காட்டுவதன் தேவை; (4) சந்தர்ப்பவாதிகளும் காவுத்ஸ்கிவாதிகளும் சுயநிர்ணயத்தை முன்னுக்குப் பின் முரணான முறையில், வெறும் சொல்லளவில் ஏற்றுக் கொள்வது, எனவே அரசியல் முக்கியத்துவத்தில் பார்ப்பின் அது வெறும் வேடம், கபடம்; (5) ''தங்களது சொந்த'' தேசங்களால் ஒடுக்கப்படும் காலனிகளுக்கும் தேசங்களுக்கும் பிரிந்து போகும் உரிமை வேண்டும் என்று கோராத சமூக-ஜனநாயகவாதிகள், குறிப்பாக ஆதிக்கம் வகிக்கும் தேசங்களைச் சேர்ந்த (பெரிய-ருஷ்ய, ஆங்கிலோ-அமெரிக்க, ஜெர்மானிய, பிரெஞ்சு, இத்தாலிய, ஜப்பானிய முதலிய) சமூக-ஜனநாயகவாதிகள், நடைமுறையில் தேசியவெறியினர்களுடன் இணைத்தவர்கள்; (6) முதலாளித்துவ அரசாங்கங்களைக் கவிழ்ப்பதற்கும் சோஷலிஸத்தை அடைவதற்குமான புரட்சிகரப் பொது மக்கட் போராட்டத்துக்கு இந்தக் கோரிக்கைக்கான போராட்டத்தையும் அரசியல் ஜனநாயகத்தின் எல்லா அடிப்படைக் கோரிக்கைகளுக்குமான போராட்டத்தையும் நேரடியாகக் கீழ்ப்படுத்துவதன் தேவை.

சிறு தேசங்களின் கண்ணோட்டத்தை, குறிப்பாக தேசியவாத முழக்கங்களால் மக்களை ஏமாற்றும் போலந்து முதலாளி வர்க்கத்தை எதிர்த்துப் போராடுவதன் விளைவாக சுயநிர்ணயத்தையே தவறாகவே மறுக்கும் போலந்து சமூக-ஜனநாயகவாதிகளின் கண்ணோட்டத்தை அகிலத்தில் புகுத்துவது தத்துவார்த்த தவறாகும்; இது மார்க்ஸியத்தை விட்டுவிட்டு புரூதோனியத்தை ஏற்றுக் கொள்வதாகும்; நடைமுறையில் ஆதிக்கம் வகிக்கும் தேசங்களின் மிகவும் ஆபத்





தான தேசியவெறியையும் சந்தர்ப்பவாதத்தையும் நம்மையுமறியாமல் ஆதரிப்பதாகும்.

ரு.ச.ஜ.தொ. கட்சியின் மத்திய ஏடாகிய
சொத்ஸியால்-டெமக்ராட்டின் ஆசிரியர் குழு

பின்குறிப்பு. *Die Neue Zeit* பத்திரிகையின் இப்பொழுது வெளிவந்த 1916, மார்ச்சு 3ந் தேதி இதழில் காவுத்ஸ்கி படுமோசமான ஜெர்மன் தேசியவெறியின் பிரதிநிதியாகிய ஆஸ்டர்லித்ஸுக்கு கிறித்துவச் சமரச உணர்வுடன் கை கொடுக்கிறார். ஹிண்டன்பர்குக்கும் இரண்டாம் வில்ஹெல்முக்கும் குற்றேவல் செய்வதற்காக ஹாப்ஸ்பர்க் மன்னர்களின் ஆஸ்திரியாவிலுள்ள ஒடுக்கப்பட்ட தேசங்களுக்குப் பிரிந்து போகும் சுதந்திரத்தை மறுக்கும் அதே நேரத்தில் ருஷ்யப் போலந்துக்குப் பிரிந்து போகும் உரிமை வேண்டும் என்பதை ஏற்றுக் கொள்கிறார். காவுத்ஸ்கிவாதி தன்னைத் தானே வெளிப்படுத்திக் காட்டுவதற்கு மிகவும் நல்ல வழி தான்!

*1916 ஜனவரி-பிப்ரவரியில்*
*எழுதப் பெற்றது*

*1916 ஏப்ரல், Vorbote,*
*இதழ் 2ல் வெளிவந்தது*

நூல் திரட்டு,
*தொகுதி 27,*
*பக்கங்கள் 252-66*